## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.126/2016

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.6 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 03.04.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேம்குமார் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதியுடன் நான் சுமூகமான உறவுமுறையிலும் பேச்சுவார்த்தையிலும் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் வாதி கண்ணம்மாள் எனது அப்பாவின் மனைவியாவார். எனக்கு பெரியம்மாவா சித்தியா என்று தெரியவில்லை. எனது தாயார் பெயர் ராணி. 1ம் வாதி கண்ணம்மாள் எனது தாயாருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எது தாயாருடன் பேச்சுவார்த்தையில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் வாதி கண்ணம்மாள் எனது தாயாருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்58/2013 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் கண்ணம்மாள், சித்ரா, செல்வி ஆகியோர் மட்டும்தான் எனது தகப்பனாருக்கு வாரிசு என்றும் மற்ற யாரும் வாரிசுகள் இல்லை என்று விளம்புகை செய்ய கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது தாயார் மட்டும்தான் தரப்பினர் என்றால் அதில் நான் ஒரு தரப்பினர் கூட இல்லை என்றாலும் அந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும்

தெரியாது. மேற்படி வழக்கில் வாதிகள் மட்டும் தான் எனது தகப்பனாருக்கு வாரிசுகள் என்று தீர்மானிக்கப்பட்டு நிறைவேற்ற மனு.12/24 நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

வாதிகள் விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சம்பந்தபட்ட விவரங்களை எனக்கு சொன்னது கிடையாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்ய நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் எனக்கும் பாகம் உள்ளதாக எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் எனது தகப்பனாரின் மகன் என்பதால் எனக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று சொல்லியுள்ளேன். (என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண்.4/2012 என்ற வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நகல் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை.) இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியான பிரகாஷ் அசல் வழக்கு எண்.4/2012 ல் 4ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பிரகாஷ் எனது பாட்டியை ஏமாற்றி செட்டில்மெண்ட் ஆவணம் எற்படுத்தியுள்ளார். எனது பாட்டி இறந்ததற்கு பிறகு அவரே இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்து கொண்டார்.

என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண்.15/2015 வழக்கானது மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றாலும் அதில் நான் ஒரு தரப்பினார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண்.15/2015 ல் எனது தரப்பில் வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து என்றால் அதுப்பற்றி சரியாக ஞாபகம் இல்லை. மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் எனக்கு எதிராக நடைபெற்ற வழக்கில் எதுவும் தெரியாது என உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்குரையானது அசல் வழக்கு எண்.4/2012 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்துக்கள் யாருக்கு சொந்தமானது என்றால் எனது தகப்பனார் கிருஷ்ணமூர்த்திக்கு சொந்தமானதாகும். மேற்கண்ட நீரூபண வாக்குமூலத்தில் தாவா

சொத்துக்கள் செல்வம் என்பவருக்கு சொந்தமானது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். செல்வம் என்பவர் எனது சித்தப்பா ஆவார். எனது கொள்ளு தாத்தாவிற்கு சொந்தமான சொத்தை பொறுத்து எனது அப்பா மற்றும் சித்தப்பாவிற்கும் தனித்தனியாக பாகங்கள் ஒதுக்கப்பட்டது. நான் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் வாரிசு என்று சொல்லி வாதியால் தாக்கல் செய்யபட்டுள்ள வழக்குரையிலோ வேறு வழக்குகளிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா செல்வம் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்வம் என்பவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதால் அவரது வாரிசாக அவரது அம்மா அலமேலு வருகிறார் என்றால் சரியல்ல. செல்வத்தின் வாரிசு என்ற அடிப்படையில் அலமேலு அம்மாள் ஏற்படுத்தி கொடுத்த எந்த ஆவணமும் செல்லத்தக்கது அல்ல என்று தான் நான் சொல்கிறேன்.

கடந்த 1960 -ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் என்று சொல்லி அலமேலு அம்மாள் வேறு எந்த ஆவணங்களும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்றால் உயிலை ஏற்படுத்தி கொடுக்கும் நபர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரடியாக செல்ல வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு உயில் ஆவணம் எவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி என்ன மோசடி செய்தார் என்றால் எனது கொள்ளு தாத்தா எழுதி கொடுத்த ஆவணம் குறித்து தெரந்து கொண்டு தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அடைய வேண்டும் என்பதற்காக எனது பாட்டி அலமேலு அம்மாவை ஏமாற்றி மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியுள்ளார். அந்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கு பின்னிட்டும் தொடர்ச்சியாக எங்களை மோசடி செய்து ஏமாற்றி வருகிறார். 1ம் பிரதிவாதி பிரகாஷ் மீது நானும் வாதிகளும் சேர்ந்து கொண்டு பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அந்த வழக்கில் எங்களுக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதால் அவருக்கு எதிராக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்துபோன் கிருஷ்ணமூர்த்திக்கு நான் வாரிசு இல்லை என்று சொல்லி தீர்மானிக்கப்பட்ட பின்பும் நான் மேற்கண்டவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எந்த வாக்குமூலத்திலும் எந்த நீதிமன்றத்திலும் நான் கிருஷ்ணமூர்த்தியின் வாரிசு இல்லை என்று மறுக்கவில்லை. நான் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் வாரிசு என்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் எல்லா ஆவணங்களும் உள்ளது. தாக்கல் செய்ய சொல்லும் பட்சத்தில் எல்லா ஆவணங்களையும் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேன். வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்துக்கள் செல்வத்துக்கு சொந்தமானது என்றால் அதுப்பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மீது எனக்கு ஏற்கனவே இருந்த கோபத்தின் காரணமாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.04.04 11:46:23 +0530

District Munsif

Mannargudi.